முதல்வருக்கு பதில் தருவதாக நினைத்து

# உளறிக் கொட்டி பீலாவிடும் அடிமை பழனிசாமி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!

**சென்னை, டிச.28–**

**சட்டமன்றத்தில் முதலமைச்சர் எழுப்பிய கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லாமல் வெளிநடப்பு என புறமுதுகு காட்டி ஓடும் பழனிசாமிக்கு OPEN CHALLENGE என பீலா தேவையா? என எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி கொடுத்துள்ளார்.**

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சியில் ஓபன் சேலஞ்ஜ் விடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பதில் தருவதாக நினைத்து, உளறிக் கொட்டியிருக்கும் அடிமை எதிர்க் கட்சித் தலைவரே...

திமுக அரசு விஷயம் என்றால், முழித்துக் கொள்வதும், ஒன்றிய அரசு விவகாரமாக இருந்தால் கண்ணை மூடிக்கொள்வதும் என உங்கள் செயல்பாடு உருமாறுவது உங்களுக்குத் தெரியுமா? தெரியாதா? அமித்ஷா முன்பு செய்தியாளர்களிடம் பேச அஞ்சும் அடிமை பழனிசாமி, சூனா பானா வேடம் தரிக்கிறார்?

கள்ளக்குறிச்சி மாவட்டம் உருவாக்கினால் போதுமா? பெயர் வைத்தால் குழந்தை தானாக வளர்ந்துவிடுமா? அந்தக் குழந்தைக்குச் சத்தான உணவைத் தர வேண்டாமா? மாவட்டத்தை உருவாக்கினால், அதனை நிர்வகிக்கக் கட்டடம் வேண்டாமா?

**கள்ளக்குறிச்சியில் தற்காலிக ஆட்சியர் அலுவலகம் திறந்த எடப்பாடி!**



கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டி வளாகத்தில் தற்காலிகமாக கலெக்டர் அலுவலகத்தை வைத்துவிட்டுப் போனீர்கள். திமுக அரசு வந்த பிறகுதான் 2024 செப்டம்பரில் கலெக்டர் பிரசாந்த் அவர்களால் புதிய கலெக்டர் அலுவலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. எதையும் டிவியை பார்த்துத் தெரிந்து கொள்ளும் பழனிசாமிக்கு இது தெரியாதா? அப்படி அடிக்கல் நாட்டப்பட்ட கட்டடத்தை முதல்வர் திறந்து வைத்ததும் ஏன் எரிகிறது?

'அதிமுக ஆட்சியின் திட்டங்களுக்கு ரிப்பன் வெட்டி ஸ்டிக்கர் ஒட்டுகிறோம்' என்கிறார் பழனிசாமி. 2015ல் சென்னையில் பெரு வெள்ளம் ஏற்பட்டபோது, தனியாரும் தன்னார்வலர்களும் அளித்த நிவாரணப் பொருட்களில் எல்லாம் தேடித் தேடி ஜெயலலிதாவின் படத்தை ஸ்டிக்கர் ஒட்டியவர்கள்தானே நீங்கள்! பட்ஜெட் சூட்கேஸ், குதிரை, குழந்தை, மணமக்கள் என எதையும் விட்டு வைக்காமல் அவர்கள் மீதெல்லாம் ஸ்டிக்கர் ஒட்டி தமிழ்நாட்டின் மானத்தை அகில உலகிற்கும் காட்டியவர்களுக்கு எப்போதும் ஸ்டிக்கர் பற்றிய நினைப்புதான் இருக்கும்!

**எடப்பாடி ஆட்சியின் அவலங்களைச் சொல்லவா?**

பரமக்குடி துப்பாக்கிச் சூடு, தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, கிரானைட் கொள்ளை, கொடநாடு கொலைகள், கூவத்தூர் கூத்துகள், மவுலிவாக்கம் கட்டட விபத்து, மக்கள் நலப் பணியாளர்கள் போராட்டம், தர்மபுரி கலவரம், சாத்தான்குளம் இரட்டை மரணம், நிர்மலாதேவி விவகாரம், ஜல்லிக்கட்டு போராட்டம் என சந்தி சிரித்தது எல்லாம் யாருடைய ஆட்சியில்? இதில் சிறப்பான ஆட்சியைக் கொடுத்தாராம். உங்களுக்குக் கொஞ்சம் கூட வெட்கமாக இல்லையா? இன்னும் பட்டியல் போட முடியும். நீங்கள் மூச்சு இரைக்க வாசிக்க வேண்டியிருக்கும் என்பதால் குறைத்துச் சொல்லியிருக்கிறோம்.

20 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் என்று சொன்னதும் பழனிசாமியின் அடிவயிறு ஏன் எரிகிறது? தேர்தல் வாக்குறுதி என்பது 5 ஆண்டுகளில் நிறைவேற்றுவது. அதனை ஏன் நான்கரை ஆண்டுகள் கழித்துக் கொடுக்கிறீர்கள்? எனக் கூச்சமே இல்லாமல் கேள்வி எழுப்புகிறார் பழனிசாமி.

அதிமுக ஆட்சியில் அம்மையார் ஜெயலலிதா கொண்டு வந்த லேப்டாப் திட்டத்தை நாங்கள் முடக்க நினைக்கவில்லை. அதனால்தான் அந்தத் திட்டத்தைத் தொடர்கிறோம். ஆனால், எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் 2019ஆம் ஆண்டு வரை மட்டுமே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். ஜெயலலிதா கொண்டு வந்த திட்டத்தையே முடக்கிவிட்டு பேச்சை பாருங்க... எகத்தாளத்தை பாருங்க... லொள்ள பாருங்க..!

**சட்டப்பேரவையில் புறமுதுகு காட்டி ஓடும் பழனிசாமி!**

'என்னோடு நீங்கள் நேருக்கு நேர் மேடை ஏறத் தயாரா? அதிமுக ஆட்சி பற்றி நீங்கள் என்ன கேட்டாலும் நான் பதில் சொல்லத் தயார். திமுக ஆட்சி பற்றி எனது கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லத் தயாரா?' என கேட்டிருக்கிறார். இதற்கு எதற்கு மேடை போட வேண்டும்?சட்டமன்றத்தில்தான் நேருக்கு நேர் பேசலாமே! அங்கே முதலமைச்சர் எழுப்பிய கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லாமல் வெளிநடப்பு என புறமுதுகு காட்டி ஓடுபவருக்கு OPEN CHALLENGE என பீலா தேவையா?

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2025) திருவண்ணாமலையில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் தொடக்க விழா மற்றும் திருவண்ணாமலை மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டுவிட்டு, சென்னை திருப்பும் வழியில் திருவண்ணமாலை மாவட்டம், வந்தவாசியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என். அண்ணாதுரை, தரணிவேந்தன். சட்டமன்ற உறுப்பினர் எஸ் அம்பேத்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---

க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! எம்.எஸ்.சுகுமார் நிகழ்ச்சி ஏற்பாடு!

# காஞ்சிபுரத்தில் எளியோர் எழுச்சி நாள் விழா - நல உதவிகள்!

### அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் – ஆர்.காந்தி – தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

*காஞ்சிபுரம், டிச. 28-*

*காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் இளைய தலைமுறை தலை நிமிர வாழ்வில் விடியல் ஒளி நிறைய புதுமை வழி காட்டும் துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை எளியோர் எழுச்சி நாள் விழாவாக கொண்டாடிடும் வகையில் 696 நபர்களுக்கு நல உதவிகள் வழங்கப்படுகிறது.*

*அதன் படி 149 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், 349 தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள், 49 திருநங்கைகளுக்கு1 மாதத்திற்குத் தேவையான மளிகை பொருட்கள் மற்றும் அரிசி வழங்குதல், 149 மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவானது 30.12.2025-செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் 2 மணிக்கு, காஞ்சிபுரம் கே.பி.கே. ரத்தினபாய் திருமண மண்டபத்தில் எழுச்சியுடன் நடைபெறுகின்றது.*

*இவ்விழாவிற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.*

*தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.*

*மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், பி.எம்.குமார், படுநெல்லி பி.எம்.பாபு, எஸ்.சந்துரு, அ. தசரதன், சு.வெங்கடேசன், அ.யுவராஜ், ப.சுகுமார், எம்.வி.இளம்பருதி, எம்.அருள் முருகன், கே. கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இவ் விழாவில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், ஆர்.காந்தி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாநிலச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு நல உதவிகளை வழங்கி சிறப்பிக்கின்றனர்.*

*இவ் விழாவில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ப.அப்துல் மாலிக், வே.கௌதமன், சன்பிராண்டு கே. ஆறுமுகம், ஜெ.ராமகிருஷ்ணன், மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச்செல்வன், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயான், நித்யா சுகுமார், மலர்கொடி குமார், ஆர்.கே. தேவேந்திரன், சசிகாலா கணேஷ், சாந்தி சீனிவாசன், செவிலிமேடு எஸ்.மோகன், ராஜலட்சுமி குஜராஜ், வி.எஸ்.ராமகிருஷ்ணன், ஜி.சுகுமாரன், தி. அன்பழகன், பெ.சுந்தரவரதன், பா.கார்த்திகேயன், வ.மலர்மன்னன், கே.ஏ.இளங்கோ, நாத்திகம் நாகராசன், டி.ஜெய்கணேஷ், ஏ.செல்வி, டி. வெங்கட்ராமன், சி.ராதாகிருஷ்ணன், ஆ. சசிக்குமார், இ.அசோகன், எஸ். தாஸ், எஸ்.டில்லிபாபு, தி.ராம்பிரசாத், கிளார் ஏழுமலை, கே.பி.ராதாகிருஷ்ணன், எம்.துரைசாமி, பி.எம்.நீலகண்டன், எம். மகாவீர்சந்த், எஸ்.தமிழ்ச்செல்வன், இ.ஜாபர், எம். மகேந்திரன், ர.வரதன், சி.எஸ்.விஜயகுமார், டி. ராஜா, ஆ.தினேஷ் பாபு, எஸ்.நவீன், ஆர்.விஜய லட்சுமி, என்.ஜெயபால், எஸ். கே.சுரேஷ், ஆர்.கே.சசிகுமார், இ.அப்பன் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், காஞ்சிபுரம் மாவட்டப் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், காஞ்சிபுரம் மாநகர பகுதிக் கழக நிர்வாகிகள், காஞ்சிபுரம் மாநகர - பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள், வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள், காஞ்சிபுரம் மாநகர வட்டக் கழகச் செயலாளர்கள், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய கிளைக் கழகசெயலாளர்கள், வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய கிளைக் கழக செயலாளர்கள் உள்பட கழக முன்னணித்தோழர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*நிறைவாக 1வது பகுதிக் கழகச் செயலாளர் கே.திலகர் நன்று கூறுகிறார்.*



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் அவர்களை சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி, 151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச. சங்கர் கணேஸ் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்து கொண்டதை முன்னிட்டு நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

---

திருவண்ணாமலை மாநகரில்

# ரூ. 56.5. கோடி மதிப்பில் புதிய அரசு மாதிரி பள்ளிக் கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்!

**திருவண்ணாமலை,டிச.28–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2025) திருவண்ணாமலை மாவட்ட அரசு விழாவில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் திருவண்ணாமலை மாநகரில் 56 கோடியே 47 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு மாதிரி பள்ளிக் கட்டடம் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கான விடுதிகளை திறந்து வைத்தபின்னர், திருவண்ணாமலை மாநகர் அரசு மாதிரி பள்ளிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.**



**அரசு மாதிரி பள்ளிகள்**

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கல்வி, நுண்கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையிலும், அரசுப் பள்ளி மாணவர்கள் சிறந்த கல்வி நிறுவனங்களில் தொழில்முறை கல்வி பிரிவுகளில் (அறிவியல், தொழில் நுட்பம், பொறியியல், கலை மற்றும் மருத்துவம் – STEAM) சேர்ந்து பயிலும் வாய்ப்பினை உறுதி செய்யும் வகையிலும் மாதிரிப் பள்ளிகள் மாவட்டந்தோறும் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2025) திருவண்ணாமலை மாவட்ட அரசு விழாவில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் திருவண்ணாமலை மாநகர் அரசு மாதிரி பள்ளிக்கு நேரில் சென்று பார்வையிட்ட போது, பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி ஸ்ரீநிஷா, நவம்பர் 27–30 வரை திரிபுரா மாநிலத்தில் நடைபெற்ற தேசிய செஸ் சாம்பியன் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட பதக்கம் மற்றும் சான்றிதழை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

**திருவண்ணாமலை மாநகரில் திறந்து வைக்கப்பட்ட அரசு மாதிரி பள்ளிக் கட்டடம் மற்றும் விடுதிகள்**

திருவண்ணாமலை மாநகர் அரசு மாதிரி பள்ளிக் கட்டடம் 4.52 ஏக்கர் பரப்பளவில் 19 கோடியே 33 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவிலும், மாணவர்கள் விடுதிக் கட்டடம் 18 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவிலும், மாணவியர் விடுதிக் கட்டடம் 18 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவிலும், என மொத்தம் 56 கோடியே 47 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இவ்விடுதிகள் 400 மாணவர்கள் மற்றும் 400 மாணவியர் தங்கும் வசதி கொண்டதாகும்.

**மாதிரி பள்ளி மற்றும் விடுதிக் கட்டங்களின் முக்கிய அம்சங்கள்**

திருவண்ணாமலை மாநகர் அரசு மாதிரி பள்ளிக் கட்டடம், தரை மற்றும் இரண்டு தளங்களுடன் மொத்தம் 52,695 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதில் 22 வகுப்பறைகள், பெண் மற்றும் ஆண் ஆசிரியர்கள் அறைகள், பல்நோக்கு மண்டபம், நூலகம், கலை மற்றும் கைவினைப் பயிற்சி அறை, மூன்று மாற்றுத் திறனாளிகள் கழிப்பறைகள், 60 கழிப்பறைகள், 6 கைக் கழுவும் தொட்டிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்தள வசதி (Ramp), வேதியியல், இயற்பியல் மற்றும் உயிரியல் ஆய்வகங்கள், 2 உயர் தொழில் நுட்பக் கணினி அறைகள் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் : மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் தரை மற்றும் நான்கு தளங்களுடன் தலா 73,195 சதுர அடி பரப்பளவில் தனித்தனி கட்டடங்களாக கட்டப்பட்டுள்ளன.

இவ்விடுதிகள், மாணவர்களுக்கு 416 மற்றும் மாணவியர்களுக்கு 416 படுக்கைகள், என மொத்தம் 832 படுக்கை வசதிகளை கொண்டது. மேலும், பொது அறை / நூலகம், தலா 2 விடுதிக் காப்பாளர் அறைகள், தலா 2 மின்தூக்கிகள், சமையலறைகள், சமையல் பொருட்கள் சேமிப்பு அறைகள், தலா 200 நபர்கள் அமரும் கொள்ளளவு கொண்ட உணவுக் கூடம், கைக் கழுவும் பகுதிகள், எரிபொருள் அறைகள், தலா 65 கழிப்பறைகள், தலா 10 மாற்றுத் திறனாளிகள் கழிப்பறைகள், தலா 75 குளியலறைகள், தலா 2 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், 20 வெந்நீர் இயந்திரங்கள் (Water Heater 25 லிட்டர்), தலா 2 தரை நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், ஆழ் துளை கிணறுகள், தீ அணைப்பான்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் திருவண்ணாமலை மாநகர் அரசுப் பள்ளிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, அங்கு பயிலும் மாணவ, மாணவியர்களுடன் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அப்போது, பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி ஸ்ரீநிஷா, நவம்பர் 27 – 30 வரை திரிபுரா மாநிலத்தில் நடைபெற்ற தேசிய செஸ் சாம்பியன் போட்டியில் கலந்து கொண்டு மூன்றாம் இடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட பதக்கம் மற்றும் சான்றிதழை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்வின்போது, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலர் ஆர். சுதன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.